**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 01.08.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சிறிய தேன்கூடு வண்டு

சிறிய தேன்கூடு வண்டு என்பது பொதுவாக "சாறு வண்டுகள்" என்று அழைக்கப்படும் நிடிடுலிடே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பூச்சியாகும். இது தேனீ வளர்ப்பில் கடுமையான பொருளாதார சேதத்தை ஏற்படுத்தும் ஒரு முதன்மை தீங்குயிரியாகும். இதன் தாயகம் ஆப்பிரிக்காவின் சஹாரா பகுதியாகும். இந்த வண்டுகள் ஆப்பிரிக்காவில் சிறியளவில் பாதிப்பு ஏற்ப்படுத்தினாலும் ஐரோப்பிய தேனீக்கள் வாழும் புதிய சூழலுக்குள் இது பரவிய போது, ஆரோக்கியமான தேனீப் பண்ணைகளைக் கூட முழுமையாக அழிக்கும் திறனுள்ள கொடிய பூச்சியாக மாறியது. இவை இந்திய தேனிக்கள், இத்தாலிய தேனிக்கள் , கொசுத் தேனீக்கள், மலைத் தேனீக்கள் மற்றும் வண்டுத் தேனீக்களின் கூடுகளையும் தாக்கி அழிக்கின்றன. இந்தியாவில் இதன் தாக்குதல் முதன்முதலில் மேற்குவங்காளத்தில் 2022 ஆம் ஆண்டிலும் ஆந்திர பிரதேசத்தில் 2023 ஆம் ஆண்டிலும் கண்டறியப்பட்டது. தமிழ் நாட்டில் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கோயம்புத்தூர்மாவட்டத்தில் உள்ள ஆனைமலை மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் இந்திய தேனீ, இத்தாலிய தேனீ மற்றும் மலைதேனிகூடங்களில் தமிழ் நாடு வேளாண்மை பல்கலை கழகத்தால்கண்டறியப்பட்டுள்ளது.

**உயிரியல் மற்றும் வாழ்க்கைச் சுழற்சி**

இந்த வண்டுகள் முட்டை, புழு, கூட்டுப்புழு, முதிர்ந்த வண்டு ஆகிய நான்கு நிலைகளைக் கொண்ட முழு உருமாற்ற வளர்ச்சி முறையைக் கொண்டுள்ளன.

சுற்றுப்புற வெப்பநிலை, ஈரப்பதம் மற்றும் உணவு கிடைப்பதைப் பொறுத்து இதன் வாழ்க்கைச் சுழற்சி 4 முதல் 12 வாரங்கள் வரை நீடிக்கும்.

**முட்டைகள்**

இதன் முட்டைகள் வெள்ளை நிறத்தில், சுமார் 1.4 மிமீ நீளமும் 0.26 மிமீ அகலமும் கொண்டு, சிறிய வாழைப்பழம் போலக் காட்சியளிக்கும். பெண் வண்டுகள் தேனீக்களின் தாக்குதலில் இருந்து தப்பிக்க தேன்கூட்டின் அடிப்பலகை இடுக்குகள், விரிசல்கள் அல்லது மூடிய மறைவிடங்களில் ஒளிந்து கொண்டு மறைவான இடங்களில் 10 முதல் 30 முட்டைகளை தேனீக்களின் அடைச்சட்டங்களில் இடுகின்றன. முட்டைகள் பொரிப்பதற்கு 70%–க்கும் அதிகமான ஈரப்பதம் தேவைப்படுகிறது. பொதுவாக 1 முதல் 3 நாட்களில் முட்டைகள் பொரிந்து புழுக்கள் வெளிவரும்.

**புழுப் பருவம்**

ஒரு மிமீ நீளமுடன் வெள்ளை கலந்த மஞ்சள் நிறத்தில் இருக்கும் புதிதாகப் பொரித்த இளம் புழுக்கள் 7 முதல் 14 நாட்களில் முழு வளர்ச்சியடையும் போது 12 மிமீ நீளம் வரை வளரும். உடலின் முன்பகுதியில் மூன்று ஜோடி உண்மையான கால்களும், முதுகுப்புறத்தில் வரிசையாகச் சிறிய முட்களும் இருக்கும். இவை தேன்கூட்டிலுள்ள தேனீக்களின் முட்டைகள், மூடப்படாத புழுக்கள், சேமிக்கப்பட்ட மகரந்தம் மற்றும் தேன் ஆகியவற்றைத் தீவிரமாகத் தின்று தீர்க்கும்.

**கூட்டுப்புழு பருவம்**

முதிர்ந்த புழுக்கள் கூட்டமாக அந்திப் பொழுதுகளில் கூட்டை விட்டு வெளியேறி, தரையிறங்கி மண்ணுக்குள் சென்று கூட்டுப் புழுவாக மாறும். இவை தளர்வான, வெப்பமான, ஈரப்பதமுள்ள மணல் கலந்த வண்டல் மண்ணில் 10 முதல் 20 செமீ ஆழம் வரை செல்லும். களிமண் அல்லது முற்றிலும் காய்ந்த வறண்ட மண்ணில் கூட்டுப்புழுக்கள் இறந்துவிடும். பொதுவாக 3 முதல் 4 வாரங்களுக்குபின் வண்டுகளாக மாறும் இக்கூட்டு புழுக்கள் குளிர்காலத்தில் பல மாதங்கள் வரை மண்ணுக்குள்ளேயே உறக்க நிலையில் இருக்கும்.

**முதிர்ந்த வண்டு**

மண்ணிலிருந்து புதிதாக வெளிவரும் இளம்பழுப்பு நிற வண்டுகள், சில நாட்களில் கரும்பழுப்பு அல்லது கறுப்பு நிறமாக மாறும். தேனீயின் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவுடைய இவ்வண்டுகளின் உணர்நீட்சிகளின் நுனி முளைக்குச்சி போல பருத்து இருக்கும்.

இவை தேனீக்கள் வெளியிடும் ஆபத்துக்கால எச்சரிக்கை வேதிப் பொருட்கள் மற்றும் புளித்த தேன் அல்லது மகரந்தத்தின் வாசனை மூலம் 10 முதல் 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கூடுகளையும் கண்டறிந்து தாக்கி அழிக்கின்றன. தேன் கூடுகளுக்குள் 6 மாதங்கள் வரை இவை உயிர்வாழும். பெண்வண்டுகள் வெளிவந்த 7 நாட்களில் இனப்பெருக்கத் திறனைப் பெற்று, தன் வாழ்நாளில் 2,000 முட்டைகள் வரை இடும்.

தேனீக்கள் கூடுகளுக்குள் நுழையும் இந்த வண்டுகளை கூண்டின் இடுக்குகளிலும் மூலைகளிலும் விரட்டிச் சிறைபிடிக்கும். சிறையில் இருக்கும் வண்டுகள் தேனீக்களை போல சைகை செய்து வேலைக்கார தேனீக்களை வசியப்படுத்தி தங்களுக்கு உணவளிக்க வைக்கின்றன.

வலுவான கூடுகளில், இவை தேனீ பெட்டிகளின் இடுக்குகள் வழியாக நுழைந்து அடிப்பலகையிலுள்ள கழிவுகளைத் தின்று உயிர்வாழும். கூடு பலவீனமடையும் போது, சட்டங்களின் ஓரங்களில் பெருமளவில் முட்டையிட்டுத் தேனீக்களுக்குப் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தும். தேன்கூடு வரோவா உண்ணிகளாலோ, ராணித் தேனீ இல்லாமலோ அல்லது மோசமான ஊட்டச்சத்தாலோ பலவீனமடையும் போது வண்டுகளின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் உயர்கிறது.

**பாதிப்பு அறிகுறிள்**

**அடைகளின் சிதைவு:** ஆயிரக்கணக்கான வண்டுப்புழுக்கள் தேன் மெழுகு அடைகளைத் துளைத்துச் செல்வதால், அடைகளின் கட்டமைப்பு முற்றிலும் சீர்குலையும். அவை மூடிய அறைகளைத் திறந்து தேனீக்களின் கூட்டுப்புழுக்களைத் தின்னும்.

**தேன் நொதித்தல் மற்றும் கசிதல்:** இவற்றின் மலக் கழிவுகளில் *உள்ள* ஒரு வகையான ஈஸ்ட் தேனை நொதிக்கச் செய்து மனிதப் பயன்பாட்டிற்கு உபயோகமற்றதாக மாறுகிறது. இதனால் தேனின் அடர்த்தி குறைந்து, குமிழ்கள் தோன்றும்.

**துர்நாற்றம் மற்றும் கூட்டை கைவிடுதல்:** பாதிக்கப்பட்ட அடை முழுவதும் அழுகிய ஆரஞ்சுப் பழ வாசனை வீசும், மேலும் ஆரஞ்சு நிறத்தில் உருவாகும் பிசுபிசுப்பான திரவத்தின் நாற்றம் தேனீக்களுக்கு அறவே பிடிக்காது என்பதால், ராணித் தேனீ முட்டையிடுவதை நிறுத்திவிட்டு, மொத்தத் தேனீக்களும் கூட்டை விட்டுப் பறந்து ஓடிவிடும்.

**தேன் சேகரிப்பு அறைகளில் சேதம்:** கூடுகளில் இருந்து எடுக்கப்பட்ட தேன் அடைகளை 24–48 மணி நேரத்திற்குள் பிழியாமல் சேமித்து வைத்திருந்தால், தேனீக்களின்

பாதுகாப்பு இல்லாததால் அதிலுள்ள இவ்வண்டுகளின் முட்டைகள் பொரித்து வெளி வரும் புழுக்கள் சில நாட்களிலேயே மொத்தத் தேனையும் நாசமாக்கிவிடும்.

**ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை**

- அடிப்பலகையையும் தேனடைகளையும் வாரம் ஒரு முறை தொடர்ந்து கண்கன்னிக்க வேண்டும்.
- வண்டு பாதிப்புள்ள பகுதிகளிலிருந்து பிற பகுதிகளுக்கு பெட்டிகளை மகரந்த சேர்க்கைக்ககவோ தேன் உற்பதிக்காகவோ மாற்றக்கூடாது.
- தேனிக்கூட்டன்களை அதிக எண்ணிக்கையுள்ள தேனீக்களுடன்பராமரிக்க வேண்டும்
- தேவைக்கு அதிகமான எண்ணிக்கையில் தேனடை அறைகளை பயன்படுத்தக்கூடாது
- தேன்பெட்டி வைத்துள்ள இடங்களில் நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்த வேண்டும்
- பாதிக்கப்பட்டதேனடைகளை எரித்துவிட வேண்டும். பாதிக்கப்பட்ட பெட்டிகளையும் சட்டங்களையும் தீ துப்பாக்கி மூலம் பொசுக்க வேண்டும்.
- கூடுகளை நிழலில் வைக்காமல் நேரடி வெயிலில் வைப்பதன் மூலம் மண் காய்ந்து, கூட்டுப்புழுக்கள் உருவாவது தடுக்கப்படும்.
- கூட்டைச் சுற்றியுள்ள மண்ணைக் கிளறி விடுவதன் மூலம் கூட்டுப்புழுக்களை இயற்கை எதிரிகளுக்கு வெளிப்படுத்தலாம்.
- கூடுகளின் மூலைகளில் மினரல் ஆயில் அல்லது டயட்டமேசியஸ் மண் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் பொறிகளை வைக்கலாம்.
- மண்ணில் மண்ணில் உள்ள புழுக்களையும் கூட்டு புழுக்களையும் அழிக்க பூச்சிண்ணி நூற்புழுக்கள் மற்றும் பூஞ்சைகளைக் கொண்ட நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தலாம்.

| | |
|---|---|
| <br>Eggs | <br>Adult Beetle |
| <br>Larvae | <br>Larvae |

**மக்கள் தொடர்பு அலுவலர்**